1967 நவம்பர் 24]

Government to give permission for such a project, will this Government also press the Central Government to grant permission for the private entrepreneurs in the Madras State also to start it ? I want to know, what are the steps which this Government are going to take in this direction ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் உறுப்பினர் கூறுவதைப்போன்று யாராவது சிறிய கார் செய்யும் திட்டத்துடன் திட்டவட்டமாக இந்த அரசாங்கத்தை அணுகினால் அது முறைப்படி இந்திய அரசாங்கத்திடம் வற்புறுத்தப்படும்.

திரு. எஸ். இராமச்சந்திரன் : மற்ற மாநிலங்களில் இல்லாத வகையில், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரை சிறிய கார் உற்பத்தி செய்வதற்கு வேண்டிய பொறியியல் நிபுணர்களும், அதற்குத் தேவைப்படும் துணை பொருள் உற்பத்தி நிலையங்களும் இங்கு இருப்பதால் நம்முடைய தமிழக அரசு தமிழகத்திலே அதற்கான முயற்சியை மேற்கொண்டு இந்தத் திட்டத்தைக் கொண்டுவருவதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலிலே தெரிவித்தபடி, சிறிய கார் உற்பத்தி செய்வதற்கு இந்திய அரசு அனுமதி வழங்கியதற்குப் பிறகு தமிழக அரசு, தமிழகத்திலே அப்படிப்பட்ட திட்டத்துடன் யாராவது முன்வருவார்களானால் அது எந்த எந்த வகையிலே, இயலுமோ அந்த அந்த வகையிலே கவனிக்கப்படும்.

Marine diesel engines

*416 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether it is a fact that the Central Government have rejected the establishment of a factory at Ennore for the manufacture of engines and its parts for ship-building in our State; and

(b) if so, the reasons, therefor?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) & (இ) செக்கோஸ்லோவாக்கியா நாட்டு உடனுழைப்புடன் மரீன் டீசல் பொறிகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை எண்ணூரில் அமைக்கலாம் என முதலில் இந்திய அரசு எண்ணியது. ஆனால் வல்லுநர் குழுவின் யோசனையின்மேல் அத்திட்டத்தை ராஞ்சியில் அமைப்பதென இறுதியாக முடிவு செய்தது. இப்பொழுது மரீன் டீசல் பொறிகளை உற்பத்தி செய்ய ஜப்பானிய நாட்டு உடனுழைப்புடன் கல்கத்தாவிலுள்ள மத்திய பீனளக் கார்ப்பரேஷனின் மூலம் ஒரு தொழிற்சாலையை எண்ணூரில் அமைக்க இந்திய அரசு எண்ணுகிறது. இத்திட்டத்திற்காக மேற்படி கார்ப்பரேஷனுக்குத் தொழில் உரிமம் இன்னும் வழங்கப்படவில்லை.

THIRU K. VINAYAKAM: Sir, what are the difficulties which this Government feel in the matter of allowing the Czechoslovakian enterprise to manufacture these diesel engines for the ship-building industry in Ennore?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எண்ணூரிலே மரீன் டீசல் பொறிகள் உற்பத்தித் தொழிற்சாலையை செகோஸ்லோவக்கியா நாட்டு உதவியுடன் ஏற்படுத்த முயற்சி செய்யப்பட்டு வருகிறது. அதை அங்கே ஏற்படுத்துவதற்கு வாய்ப்புக்களோ அல்லது பொருள் உதவிகளோ இல்லாத நிலைமை ஒன்றும் இல்லை. முந்தைய அரசாங்கமே இதற்கான நடவடிக்கைகள் எல்லாம் எடுத்து, 200 ஏக்கர் நிலம் இதற்காக வேண்டுமென்று கணக்கிட்டு ஏற்கனவே 68 ஏக்கர் நிலம், அதைத் தவிர இந்திய அரசாங்கத்திற்கும் தமிழக அரசாங்கத்திற்குமாக 160 ஏக்கர் நிலம், இவையெல்லாம் ஒப்படைவு செய்யப்பட்டது. அதற்கான சர்வே முதலியவை செய்வதற்கும் 23,416 ரூபாய் செலவு செய்யப்பட்டு இருக்கிறது. ஆனால் அதற்குப் பிறகு வல்லுனர் குழு கூடி ராஞ்சி, விசாகப்பட்டினம், சென்னை, கொச்சி முதலிய இடங்களில் எங்கே இதை ஏற்படுத்தலாம் என்று பார்த்து, அதை ராஞ்சியிலே ஏற்படுத்தலாமென்று கூறி இருக்கிறார்கள். ஆனால் அப்படிச் செய்யக்கூடாது, அதை இங்கிருந்து மாற்றக்கூடாது என்று இந்த அரசு எடுத்துச் சொல்லியும் இந்திய அரசின் முயற்சியின் காரணமாக அது ராஞ்சிக்குச் சென்றது. ஆனால் இப்பொழுது 'Central Fisheries Corporation Limited' உடன் உடன்பாடு தொழிற்சாலை வைக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கான உரிமம் பெறுவதற்கு அனுமதி கோரப்பட்டிருக்கிறது. நாம் ஏற்கெனவே மரீன் டீசல் பொறிகள் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்காக வாங்கிக் கொடுத்த நிலத்தைக்கூட அவர்கள் திருப்பித் தந்து விட்டார்கள். ஆனால் மறுபடியும் இங்கேயே ஆரம்பிக்க வேண்டுமென்று கோரியிருக்கிறோம். வருகின்ற மே மாதத்தில் அதுபற்றிய குழு கூட்டம் கூடி அதைப்பற்றி ஆலோசனை நடத்தும் என்று சொல்லியிருக்கிறார்கள்.

திரு. கே. விநாயகம் : அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து தெரிய வருகிற உண்மை—மத்திய சர்க்கார் ஒரு வேளை இந்தத் தொழிற்சாலையை நம்முடைய மாநிலத்தில் அமைக்காமல் வடக்கே இன்னொரு இடத்தில் அமைப்பது என்ற முடிவை எடுத்திருந்தாலும் கூட, ஜப்பானிய உதவியைக் கொண்டு இந்தத் தொழிற்சாலையை நம்முடைய சர்க்காரே ஏன் நடத்தக்கூடாது? அப்படி நடத்தாததற்குக் காரணம் போதிய பண வசதி இல்லாமையா அல்லது செய்ய வேண்டாமென்ற எண்ணமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தொழிற்சாலை வர வேண்டாமென்ற எண்ணம் எந்த அரசாக இருந்தாலும் இருக்கப் போவதில்லை. இதைப் பொறுத்தவரையில் அனுமதி வழங்கப்பட்டு திருப்பி வாங்கிய குற்றத்திற்கு இந்திய அரசு காரணமாகும். முன்னால் இருந்த அரசு, அமைச்சர்கள் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் பிடிவாதமாக மத்திய அரசு இதனை ராஞ்சியில்

கொண்டு போய் நிறுவி விட்டார்கள். ஜப்பான் நாட்டு உடனுழைப்புடன் சென்ட்ரல் பிஷரிஸ் கார்ப்பரேஷனுடைய முதலீட்டைக் கொண்டு இதனை நிறைவேற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

திரு. கே. பி. எஸ். மணி : கடந்த கால சர்க்கார் இருந்த காலத்திலும் சரி, இன்றைய சர்க்கார் காலத்திலும் சரி, மத்திய சர்க்கார் தென்னகத்திலே ஆரம்பிக்கப்பட வேண்டிய பல தொழில்களை ஆரம்பிக்காமலும், அனுமதி கொடுக்காமலும் ஏதாவது காரணத்தைச் கூறி தடை செய்து கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் நிவர்த்தி செய்ய வழி முறை இல்லையா? நம்முடைய சர்க்காரே இவற்றை மேற்கொண்டு செய்வதற்கு இருக்கின்ற நடைகள் என்ன?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : இதற்கு இருக்கின்ற ஒரே வழி முறை எல்லாக் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து அந்தக் கோரிக்கைகளை வலியுறுத்துவதுதான்.

உணவு தானியங்கள் கடத்தல்

* 417 வினா—திரு. ஏ. வி. பி. ஆசைத்தம்பி:
திரு. ஏ. எம். ராஜா:
திரு. கே. வினாயகம்:
} மதிப்பிற்குரிய

விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உணவுப் பொருள் பதுக்கலைத் தடுக்க மாநிலம் முழுவதும் அரசு தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், புதிய அரசாங்கம் பதவி ஏற்றபின் இதுவரை பிடிபட்டுள்ள நெல், அரிசி இவைகளின் அளவு என்ன ?

(உ) அரசாங்கத்தின் கொள்முதல் திட்ட அளவு என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) ஆம்.

(இ) 6-3-1967 முதல் 25-5-1967 வரை, உணவு வழங்குத் துறைப் பணியாளராலும் போலீசினாலும் கீழ்க்கண்ட அளவுள்ள உணவு தானியம், மண்ணெண்ணெய், உரம் முதலியன கைப்பற்றப்பட்டன:—

(1) நெல் 13,353.57 குவின்டல்

(ஒவ்வொன்றும் 75 கி.கி. கொண்ட 17,805 மூட்டைகள் அல்லது 11,81,732 பட்டணம் படி.)

(2) அரிசி 2,982.98 குவின்டல்.

(ஒவ்வொன்றும் 75 கி.கி. கொண்ட 3,977 மூட்டைகள் அல்லது, 1,96,242 பட்டணம் படி.)

(3) சிறு தானியங்களும் ஏனைய உணவு தானியங்களும் 643.73 குவிண்டல்.